# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1907/23 - 2015 මාර්තු මස 25 වැනි බදාදා - 2015.03.25

1907/23 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல.: கடு/06/2/3/73.
காணி அமைச்சின் குறிப்பு இல.:4-3/06/2012/
ஏச்டபிள்யூ/389.

2015, பெப்புருவரி 27 ஆம் திகதிய 1903/57 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் ஆ. வ. இல. கொ. 9406 இல் விபரிக்கப்பட்ட காணிகளின் இறுதித் திகதியின்போது ஆவணங்கள், சமர்ப்பிக்கப்பட வேண்டிய திகதி 2015,ஏப்பிறல் 01 எனத் திருத்தம் செய்யப் படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

2015 ஏப்பிறல் 22 என்ற திருத்தப்பட்ட புதிய திகதியில் உறுதி மற்றும் நஷ்டஈட்டு விசாரணைகள் இடம்பெறும்.

டபிள்யூ. எம். தயாவதி,
பிரதேச செயலாளர்,
கடுவெல.

பிரதேச செயலகம்,
கடுவெல,
2015, மாச்சு 24.

04-319

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல.: பிய3/1/1/227.

பொது மக்கள் பணியொன்றின் நிமித்தம் தேவைப்பாடு டையதாகவுள்ள கீழ் காணப்படும் காணியை-வழி எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியுள்ளமையை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் 7 வது பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

கம்பஹா மாவட்டத்தில் பியகம பிரதேச செயலாளர் பிரிவில் அதிகாரி பத்துவை சிறு பகுதியில் 279 ஏ பட்டிவில தெற்கு கிராம அலுவலர் பிரிவில் பட்டிவில கிராமத்தில் அமைந்துள்ள, கம்பஹா மாவட்ட நில அளவையாளர் அத்தியட்சகரினால் 2006.03.26 ஆம் திகதியிட்டு தயாரிக் கப்பட்டுள்ள ஆ.நி.வ.கி. 3520 உடைய நில வரைபடத்தில் துண்டிலக்கம் 01 எனும் காணிப்பகுதி (விஸ்தீரணத்தில் 0.2923 ஹெக்டயார்).

காணியின் பெயர்: பட்டிவில நகர சபைக் காணி; விபரம்:திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசாங்கம்; ஆரம்ப உரிமை கோருபவர்: கொழும்பு பிரதேச சபை; விஸ்தீரணம்: ஹெக்டயார் 0.2923.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015.06.10 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பியகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக தோன்றல் வேண்டும்.

மேலும், 2015.05. 27 ஆம் திகதிக்கு முன்னர் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் இரண்டு பிரதிகளையுடைய எழுத்து மூல ஆவணத்தினூடாக எனக்கு அறிவிக்க வேண்டும்.

டபிள்யூ. எச். வீ. புஷ்பமாலா,
பிரதேச செயலாளர்,
பியகம.

பியகம பிரதேச செயலகம்,
சபுகஸ்கந்த, மாகொளை
2015, மாச்சு 14 ஆம் திகதி.

04-320